# நீதிபதி V.R.கிருஷ்ணய்யர் மறைந்தார்



முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி திரு V.R.கிருஷ்ணய்யர் இன்று (04.12.2014) மாலை 03.30 மணிக்கு கொச்சியில் ஒரு மருத்துவமனையில் காலமானார். இந்திய நாட்டில் தோழர் EMS நம்பூதிரிபாட் தலைமையில் அமைந்த முதல் கம்யூனிஸ்ட் மாநில அரசாங்கத்தின் அமைச்சரவையில் செயல்பட்டவர் திரு V.R.கிருஷ்ணய்யர். அந்த அரசாங்கத்தில் சட்டம், எரிசக்தி, சிறைத்துறை, பாசனம் மற்றும் சமூக நலத்துறை அமைச்சராக மிகச்சிறப்பாக பணியாற்றினார். இவர் அமைச்சராக பணியாற்றிய போது பல்வேறு மக்கள் நலத் திட்டங்களையும், சட்டங்களையும் உருவாக்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

1968ஆம் ஆண்டு முதல் கேரள உயர்நீதிமன்ற நீதிபதியாக பணியாற்றிய அவர், 1973ஆம் ஆண்டு முதல் 1980ஆம் ஆண்டு வரை உச்சநீதிமன்ற நீதிபதியாக மிகச்சிறப்பாக பணியாற்றினார். அவர் எழுதிய தீர்ப்புகள் இந்திய நாட்டின் சமூக கலாச்சார அரசியலில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது என்றால் அது மிகையாகாது. 1937ஆம் ஆண்டில் தனது வழக்கறிஞர் பணியை துவங்கிய நாள் முதலாய் தனது இறுதி நாள் வரை இந்திய நாட்டின் ஏழை எளிய உழைப்பாளி மக்களின் நலன்களுக்காக குரல் கொடுத்த மிகச்சிறந்த முற்போக்கு சிந்தனையாளர். அவரது நீதிமன்ற தீர்ப்புகளிலும் அது வெளிப்பட்டுள்ளது.

இந்திய நாட்டின் மிக உயரிய விருதுகளில் ஒன்றான பத்ம விபூஷன் உள்ளிட்ட பல விருதுகளை பெற்றுள்ள திரு V.R.கிருஷ்ணய்யர் சமீபத்தில் தான் தனது 100ஆவது பிறந்த நாளை கொண்டாடினார். இவரது மறைவு இந்திய நாட்டிற்கு மிகப்பெரிய இழப்பு. அவரது மறைவிற்கு தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கம் தனது அஞ்சலியை உரித்தாக்குகிறது.